1505

# மாகாண மட்டப் பொதுப் பரீட்சை நவம்பர் - 2017

## கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

| தரம் : 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் - I, II | நேரம் : 3.00 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : ........................................................................ | | புள்ளி : |

கவனிக்க:
- *வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.*
- *எல்லா வினாக்களுக்கும் விடை தருக.*
- *01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

---

### பகுதி - I

➢ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) "மாக மடங்கலும் மால் விடையும் ......" இங்கு **'விடை'** என்பது
1. மலை  2. சிங்கம்  3. காளை  4. மேருமலை

02) "பொய்மை சேர் மதியினிற் புலை நாத்திகம் கூறுவர் ......." **'மதி'** என்பதன் பொருள்
1. அறிவின்மை  2. அறிவு  3. மதிப்பு  4. சாத்திரம்

03) "கள்ள ஆசையை அழித்து வேறு அவனி...." **'அழித்தல்'** என்பதன் எதிர்க்கருத்து
1. ஒழித்தல்  2. நீக்குதல்  3. வேறுபடுத்தல்  4. ஆக்குதல்

04) "வாய்ப்பேச்சால் சினிமா நலிவடைகின்றது. **'நலிவு'** என்பதன் எதிர்க்கருத்து
1. மெலிவு  2. தளர்வு  3. பொலிவு  4. சரிவு

05) "அன்னப்பேடை சிறை இலது ஆய்க்கரை துன்னிற்று........" **'பேடை'** என்பதன் எதிர்ப்பாற்சொல்
1. சேவல்  2. பெட்டை  3. பிணா  4. குண்டு

➢ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06) ஒரு தட்டிலே பல மலர்கள் சேர்த்துள்ள பூங்கொத்து
1. செண்டு  2. கதம்பம்  3. கொத்து  4. மஞ்சரி

07) பத்தைகளை வெட்டித் துப்புரவாக்கினர். **'பத்தை'** என்ற வழக்குச் சொல்லை பயன்படுத்தும் பிரதேசம்
1. வடக்கு  2. மலையகம்  3. கிழக்கு  4. மேற்கு

08) நாற்குணம் என்ற தொகைப்பெயர் குறிப்பது
1. அறம், பொருள், இன்பம், வீடு  2. அறிவு, நிறை, நாணம், கடைப்பிடி
3. மெய், வாய், மூக்கு, கண்  4. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு

09) அரசியல் வாதியின் தில்லு முல்லுகள் வெளிப்பட்டன. **தில்லு முல்லு** என்ற இணைமொழியின் கருத்தை தரும் மற்றோர் இணைமொழி
1. உருட்டுப்பிரட்டு  2. பொய்புரட்டு  3. தாறுமாறு  4. கொடுக்கல் வாங்கல்

10) மிகுதியாகச் செலவு செய்தல் என்பதை உணர்த்தும் மரபுத்தொடர்
1. கைதவறுதல்  2. விழலுக்கிறைத்தல்  3. அள்ளியிறைத்தல்  4. ஊதாரித்தனம்

kalvi.lk

Scanned by CamScanner

11) ஜனநாயக நாடொன்றில் மக்கள் தங்களது vote (வோட்) உரிமையை முறையாகப் பயன்படுத்த வேண்டும் 'vote' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச் சொல்
1. உரிமை 2. கட்சி 3. வாக்கு 4. தேர்தல்

12) மடங்கல், அரி, கேசரி என்ற சொற்கள் உணர்த்தும் ஒரு சொல்
1. யாளி 2. சிங்கம் 3. யானை 4. கரடி

13) வைக்கோல் அடுக்கிவைத்தல் 'போர்' என்பது போல கருவாடு அடுக்கி வைத்தல்
1. சிப்பம் 2. பாடம் 3. குப்பை 4. அடுக்கு

14) வறியோர்க்கு கொடுத்து வாழ்வோர் துன்பப்படமாட்டார். என்னும் கருத்தைத் தரும் பழமொழி
1. அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா? 2. கனிந்த பழம் தானே விழும்
3. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை 4. இரக்கப் போனாலும் சிறக்கப்போ

15) பின்வருவனவற்றுள் எதிர்க்கருத்துச் சொற்களைக் கொண்ட இணைமொழி
1. ஈவு இரக்கம் 2. இசகு பிசகு 3. தட்டு முட்டு 4. அறம் மறம்

16) "குத்தித்தின்றால் குன்றும் மாளும்" என்னும் பழமொழியின் கருத்து
1. உழைத்து உண்ண வேண்டும்
2. பிறர் சொத்தையே செலவழிக்க வேண்டும்
3. பல இடங்களுக்கும் சென்று உண்ண வேண்டும்
4. குந்தியிருந்து உணவை உண்ணக் கூடாது

17) சான்றோரின் பண்பை உணர்த்தும் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
1. குற்றங்களைந்து குணங்கொள்ளல் 2. சாதுரியமாகவும் மாதுரியமாகவும்
3. வெள்ளிடைமலை 4. ஏழைளியவர் வாயிலடியாமல்

18) உள்ளத்து உணர்ச்சிகள் பிறர்க்குப் புலனாகும்படி புற உடம்பிலே வெளிப்படல்
1. மெய்ப்பாடு 2. பதட்டம் 3. ஆதங்கம் 4. கூச்சம்

19) பின்வருவனவற்றுள் அடுக்குத் தொடராக வருவது
1. கடகட 2. அடிஅடி 3. விறுவிறு 4. கலகல

20) நல்லவர் போல நடிப்பவர்களுக்குப் பொருத்தமான உவமைத்தொடர்
1. உள்ளங்கை நெல்லிக்கனி போல 2. சகடக்கால் போல
3. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல 4. பசுத்தோல் போர்த்த புலி போல

➤ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) தமிழ் நெடுங்கணக்கிலுள்ள உயிர்மெய் நெடில்களின் எண்ணிக்கை
1. 5 2. 60 3. 90 4. 126

22) "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" இத்தொடரில் இடம்பெற்றுள்ள அணி
1. உவமை 2. தற்குறிப்பேற்றம் 3. சிலேடை 4. உருவகம்

23) பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயராக அமைவது
1. யாரோ 2. படித்தல் 3. உல்லாசப்பயணம் 4. பொருளியல்

24) வெறுமை + இலை என்பதன் சரியான புணர்ப்பு முறை
1. வெற்றிலை 2. வெறுமையிலை 3. வேற்றிலை 4. வெறுமை இலை

25) இனிமை, மாரி, மென்பொருள், வையகம் என்பவற்றுள் பண்புப் பெயராக அமைவது
1. மாரி 2. இனிமை 3. மென்பொருள் 4. வையகம்

26) "கைலாச பதியின் நூல்களில் ஒன்று அடியும் முடியும்" இதில் வந்துள்ள இடைச்சொல்
1. ஆவது 2. உம் 3. நூல் 4. ஒன்று

www.Paritchai.com
Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk
Scanned by CamScanner

27) 'சாய் கோபுரம்' என்பது எவ்வகைத் தொகையாகும்
1. உம்மைத்தொகை 2. அன்மொழித்தொகை 3. வேற்றுமைத்தொகை 4. வினைத்தொகை

28) "பெரியன்" என்ற சொல்லைப் பகுத்தால் வருவது
1. பெரி + யன் 2. பெருமை + அன் 3. பெரிய + அன் 4. பெரி + அன்

29) "வெள்ளியால் செய்த கொலுசு" என்பதில் இடம் பெறும் மூன்றாம் வேற்றுமைப் பொருள்
1. கருவி 2. காரணம் 3. முலப்பொருள் 4. கருத்தாப்பொருள்

30) சிவந்த கண்களுடன் மாறன் போரிட்டான். இதில் இடம் பெற்றுள்ள அடை
1. வினையடை 2. தனிவினையடை 3. தனிப்பெயரடை 4. ஆக்கப்பெயரடை

➢ **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) நகையும் பரிகாசமும் சேரந்து வரக்கவி புனையும் ஆற்றல் படைத்தவன் .......................... எனப்படுவான்.
1. ஆசுகவி 2. வரகவி 3. விகடகவி 4.நகைச்சுவைக்கவி

32) வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் ........................ வழங்கியது
1. சன்மானம் 2. நட்டஈடு 3. சம்பளம் 4. கடன்

33) பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பின் பத்தொன்பதாவது ........................ நிறைவேற்றப்பட்டது.
1. உடன்படிக்கை 2. சுற்றுநிருபம் 3. திருத்தச்சட்டம் 4. வர்த்தமானி

34) சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுதல்
1. உரைகல் 2. இடக்கரடக்கல் 3. நிந்தகம் 4. ஒப்பாரி

➢ **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35) மாணவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் அனைத்தும்
1. தரமானவையாக இருந்தன 2. தரமானதாக இருந்தது
3. தரமானவையாக இருந்தது 4. தரமானதாக இருந்தன.

36) பாடசாலையின் வெளிவாரி மதிப்பீட்டிற்காக கல்விப் பணிப்பாளருடன் அவரது முகாமைத்துவக் குழுவும்
1. சென்றனர் 2. சென்றது 3. சென்றார்கள் 4. சென்றவை

➢ **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**தமிழருக்குத் தமிழ் மொழியிற் சுவடிச்சாலை**
**சர்வகலா சாலையைப் போல் எங்கும் வேண்டும்**
**தமிழிலிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல**
**தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்**
**அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்**
**அழகியவாம் உரை நடையில் அமைந்த நூல்கள்**
**சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்**
**துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்**

37) இப்பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி யாது?
1. சர்வகலாசாலைக் காட்சி 2. தொல்லியல் சாலைக்காட்சி
3. நூதன சாலைக்காட்சி 4. சுவடிச் சாலைக்காட்சி

38) "அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள் .........." என்பதில் உள்ள அணி
1. உவமை அணி 2. தற்குறிப்பேற்ற அணி 3. உருவகஅணி 4. உயர்வுநவிற்சியணி

kalvi.lk
Scanned by CamScanner

39) இப்பாடலின் கருத்துக்குப் பொருந்தாத கூற்றைத் தெரிவு செய்க.
1. தமிழருக்கான சுடிவச்சாலை அமைக்கப்படல் வேண்டும்.
2. தமிழில் இல்லாத பிறமொழி நூல்களை தமிழாக்கம் செய்யக் கூடாது.
3. அழிவற்ற செந்தமிழ் கவிதை நூல்களைப் பெற்றுத் தருதல் வேண்டும்
4. பலதுறை சார்பாகவும் நூல்களைப் பிரித்தடுக்குதல் வேண்டும்.

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. ஜி.யு. போப் பாதிரியார் இவ்வகைச் சிற்றகராதி ஒன்றை 1859 இல் இயற்றினார்.

ஆ. உவின்ஸ்லோ அகராதி மிகவும் பெரியநூல். எல்லோருக்கும் உதவக்கூடியதல்ல

இ. இதனைத் திருத்திய நல்ல பதிப்பாக 1888 இல் மல்லாகம் விசுவநாத பிள்ளை பதிப்பித்தார்

ஈ. ஆகவே அடக்கமான சிறு அகராதிகள் இயற்றுவதில் ஒரு சிலருக்கு நோக்கம் எழுந்தது.

உ. கல்வி அதிகாரியின் உத்தரவின் பேரில் ஒரு சிற்றகராதி 1870இல் தயாரிக்கப்பட்டது

1. அ. உ. ஈ. ஆ. இ 2. ஆ. ஈ. அ. உ. இ 3. உ. இ. அ. ஈ. ஆ 4. ஆ. அ. ஈ. இ. உ

(40 x 01 = 40 புள்ளிகள்)

www.Paritchai.com

Education கல்வி அධ්‍යාපන

kalvi.lk

Scanned by CamScanner

பகுதி - II

கவனிக்க:
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01) சுருக்கமான விடை எழுதுக.

1. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
"..... கருணையார் கலியேகக் கழற்கான்......"

2. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.
"விகடரா மன்குதிரை மாதம்போங்காத வழி..."

3. பின்வரும் வாக்கியத்தில் உள்ள கூட்டுவினைச் சொல்லை இனம்கண்டு அதனை தனி வினையாக மாற்றி எழுதுக.
"குமார் புத்தாக்கக் கருவியொன்றைக் கண்டு பிடித்தான்."

4. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
"மகேன் ஒனக்கு நன்ம கெடக்கும்"

5. "அடி" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

6. பின்வரும் வாக்கியத்திலுள்ள மயக்கத்தை நீக்கி எழுதுக.
"நவீனமயப்படுத்தப்பட்ட மக்களுக்கான நாளங்காடி மிகவும் கவர்ச்சிகரமானதாய் அமைந்திருந்தது"

7. பின்வருவனவற்றுள் அறிக்கையில் அடங்கவேண்டிய அம்சங்களை இனம் காண்க.
உள்முகவரி, தலைப்பு, கண்கவர் படங்கள், இடம், காலம், விளிப்பு

8. "..... தாரானும் வாள்நுதலும் தம்மில் ........." என்ற தொடரில் கையாளப்பட்டுள்ள அணியை இனம் கண்டு விளக்குக.

9. "மாணவர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தனர்" இவ்வாக்கியத்தில் வேற்றுமை ஏற்ற சொல் எது? என்ன பொருளில் வந்துள்ளது?

10. 'ஒரு வர்ணனையாளர் தான் வர்ணிக்கும் நிகழ்ச்சி பற்றி முற்கூட்டியே பல தகவல்களைத் தெரிந்து வைத்துக்கொண்டிருப்பது மிகவும் அவசியமானது" இக் கூற்றினை ஏற்றுக் கொள்கிறீரா? காரணம் தருக.

(20 புள்ளிகள்)

www.kalvichchai.com



Scanned by CamScanner

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) "போதையற்ற உலகம்" என்ற ஜனாதிபதியின் தொனிப்பொருளுக்கிணங்க எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டல் அவசியமானது. இன்றைய சிறார்களின் பழக்கவழக்கங்களை நவீன இலத்திரணியல் தொடர்பூடகங்களின் வருகை மாற்றியமைத்துள்ளது. அந்தவகையில் உணவு, பானங்கள், மாத்திரை போன்றவற்றை விரும்பிப் பயன்படுத்தலும் அதற் கூடாக போதையை அனுபவிப்பதும் இன்று அதிகரித்துள்ளது. இதனால் சிறார்களின் உடல்நிலை பாதிப்படைதல், வீடு, பாடசாலையில் முரண்பாடு, வீண்செலவு போன்ற தொல்லைகள் அதிகரிக்கின்றன. இவ்வகையில் இன்றைய சிறார்களை நாளைய தலைவர்களாக்க இச்செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தி கௌரவ ஜனாதிபதியின் தொனிப்பொருளை நிஜமாக்க வேண்டும் என்ற வரையிலமைந்த **விளக்கக் கட்டுரை.**

ஆ) நமது நாட்டின் திறந்த பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் விதம் விதமான வாகனங்களின் தடையற்ற இறக்குமதி, இளையோரின் வாகன ஓட்டத்தில் நாட்டம், வீதிகளின் விரிவாக்கம் போன்ற காரணங்களால் வாகனங்களின் பரம்பல் அதிகரித்துள்ளது. அத்துடன் வீதி விதிகளை அனுசரித்துச் செயற்படாத வாகனச் சாரதிகளும், பாதசாரிகளின் வீதி விதிகளை மீறலும் விபத்துக்கள் அதிகரிக்கக் காரணமாய் அமைகின்றது. எனவே அரிய மனித உயிர்களைப் பாதுகாக்க வீதி விபத்துக்களை குறைப்பதும் அவசியமாகும். இவற்றைக் கருத்திற் கொண்டு நண்பர்கள் இருவருக்கிடையில் இடம்பெறும் **உரையாடல்.**

இ) பொலித்தீன் பாவனை இன்று இலங்கை மக்களால் கைவிட முடியாதளவிற்கு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இருப்பினும் அதனால் பல பக்கவிளைவுகள் ஏற்படுவதனை உணர்ந்தும் மக்கள் அப்பாவனையில் இருந்து விடுபட முடியாமலுள்ளனர். ஆனால் இப்பாவனையைக் கட்டுப்படுத்தி இதற்கு மாற்றீடாக உள்நாட்டு உற்பத்தி வளங்களையும், பொருட்களையும் பாவனைக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்தவண்ணமே உள்ளது. ஆனால் பாதகமான பக்கவிளைவுகளை மக்கள் உணர்ந்து கொண்டால் மாத்திரமே இதனை இல்லாது ஒழிக்க முடியும் என்ற கருத்திற்கு அமைவாக பொலித்தீன் பாவனையின் தீமைகளை சுட்டிக்காட்டி விளிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலமைந்த ஓர் **மேடைப்பேச்சு.**

ஈ) பாணு இன்று நல்ல தொழில்வாய்ப்பினைப் பெற்று செல்வச் சீமாட்டியாக வாழ்கிறாள். அதற்குக் காரணம் அவளது பெற்றோர்களின் வழிகாட்டலே என்பதனை இன்று அவளால் உணராமல் இருக்க முடியவில்லை. ஆனால் அன்று அவள் அவளது பெற்றோர்களை எப்படி எல்லாம் ஆட்டிப்படைத்தாள் என்பதனை நினைத்துப் பார்த்தாள். ஏனெனில் அவளை ஆளாக்க அவர்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல! என்ற கருப்பொருளைக் கொண்ட ஒரு **சிறுகதை**

(25 புள்ளிகள்)

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.**

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடை ஆசிரியர்களுள் சிவஞானசுவாமிகள் ஒப்புயர்வற்று விளங்கியது போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் சிறப்புற்று விளங்கினார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரைநடை விருத்தி அவசியமென்று வற்புறுத்தியவர்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர். கிறிஸ்தவமதப் பிரசாரத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்திற்கு உண்டான தளர்ச்சியை நீக்கிய நாவலர் பெருந்தகை, தமிழ்மொழியை வளர்ப்பதற்கு பல முயற்சிகளைச் செய்துள்ளார். சென்னையிலே அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்து பல தமிழ் நூல்களை திருத்திய முறையில் பிழையறப் பதிப்பித்துதவினார்.

எடுத்துக்கொண்ட காரியம் எதனையும் சோர்வின்றி திருத்தமாக செய்யும் இயல்பினர் நாவலர் என்பதற்கு வழுக்கள் யாதுமின்றி அவர் அச்சிட்ட நூல்களே சான்றாகும். செய்யுள் இலக்கியங்கள் வேண்டியளவு தமிழில் இருப்பதால் அவற்றை இயற்றுவதிலும் உரைநடை நூல்களை இயற்றுவதே தமிழ்மொழியை வளர்ப்பதற்குச் சிறந்தவழி என்று கொண்டு பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் முதலியவற்றை உரைநடையில் எழுதி உதவியதோடு அவர் பல கட்டுரைகளையும் கண்டன நூல்களையும் மாணவர் கற்பதற்கு வேண்டிய உரைநடைநூல் பலவற்றை எழுதியுள்ளார்.

நாவலரது உரைநடை, பழமையும் புதுமையும் ஒழுங்கு தழுவிய முற்போக்குடைய ஒரு சிறந்த நடையாகும். பழைய இலக்கண முறைகளை அனுசரித்து உரையாசிரியர்கள் எழுதிய நடையைப் போன்ற ஒரு கம்பீரமான நடையில் எழுதக் கூடிய ஆற்றல் உடையவராய் இருந்த போதும் தமிழறிவில் குறைந்தோரும் எளிதில் பொருள் காணக்கூடிய வகையில் காலத்திற் கேற்றவாறு வழக்கிலுள்ள வழுவற்ற சொற்களையும் பிரயோகித்துச் சிறந்த நூல்களை எழுதினார். அதனால் அவர் வசன நடை கைவந்த வல்லாளர் எனப் பாராட்டப்பட்டார்.

(10 புள்ளிகள்)

www.Paritchai.com



Scanned by CamScanner

04) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ்க் கல்வி மரபுக்கு புத்துயிர் பாய்ச்சியவர்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சி. வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலாநந்தர், கனகசபைப்பிள்ளை ஆகியோர் முதன்மையானவர்கள். "கண்ணின் கருமணியொப்பும் இருமணிகளாம் புலவர்மணியும் பண்டிதமணியும்" தென்படுகின்றனர். மணிகள் இருவரினதும் காவிய பாடசாலைக் காலம் பெறுமதி வாய்ந்தது. அப்பாடசாலையில் பேரறிஞர் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் முதன்மை ஆசானாகவும் இருவரது குருமணியாகவும் வாய்க்கப் பெற்றார். அவரிடம் எழுதுகோல் பிடித்து அவரின் அடிச்சுவட்டில் கால்கள் பதித்து இலக்கிய வழியில் இருவரும் நடை பயின்றனர். குரு தரிசனம் செய்யும் இவர்களின் பாங்கு இன்றைய மாணவருக்கு முன்மாதிரியாகும். ஆசான் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் வீடுதேடிச் சென்று நலம் விசாரித்து அவர்தம் பாதம் போற்றி சுற்ற இவர்கள் குருவின் அன்பிற்கும் ஆசிர்வாதத்திற்கும் உரித்துப் பெற்றனர்.

அ. தமிழ்க் கல்வி மரபிற்கு புத்துயிர் பாய்ச்சியவர்களில் முதன்மையானவர்கள் யாவர்?

ஆ. "கண்ணின் இருமணியொப்பும் இருமணிகள்" இத் தொடருடாக நீர் விளங்கிக் கொள்வது யாது?

இ. மணிகள் இருவரினதும் பாடசாலை எது?

ஈ. இருவரதும் குருதரிசனப் பாங்கு எத்தகையது?

உ. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக?

1. ஆசான்    2. பாங்கு

(02 x 05 = 10 புள்ளிகள்)

05) வரட்சியால் பாதிப்புற்ற விவசாயிகள் தமக்குரிய வரட்சி நிவாரணத்தைப் பெற்றுத் தருமாறு கோரி கமநலசேவை அதிகாரிக்கு 100சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் முக்கிய விடயங்களில் ஒன்றாக விளங்குவது விரைவுணவுக் (Fast food) கலாசாரமாகும் இதனைத் தடுத்து எமது உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கி நஞ்சற்ற நிறையுணவுகளை உட்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்த துண்டுப்பிரசும் ஒன்றை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

(15 புள்ளிகள்)

www.pitchai.com
Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk
Scanned by CamScanner

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page